1986 நவம்பர் 18]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, குடிக்க நீர் இல்லை என்று சொன்ன காரணத்திற்காக அந்தப் பகுதியிலே சில குளங்களுக்கு தண்ணீர் விடப்படுவதாக தகவல் வந்ததாக என் நினைவிலே உள்ளது. அப்படி தண்ணீர் விடப்படுகின்ற நேரத்தில், அதிகாரிகள் தவறு செய்திருப்பதாக, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதிக்கொடுத்தால் நிச்சயமாக தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆலந்தூர் தொகுதி ஜாபர்கான் பேட்டையில் அடையாற்றில் வெள்ளத் தடுப்புச் சுவர்

*70—(*வினா எண். 9722)*—திரு. ம. ஆபிரகாம் மற்றும் திரு. சைதை. சா. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலந்தூர் தொகுதியில் ஜாபர்கான் பேட்டை பகுதியில் மழைக் காலங்களில் அடையாறு ஆற்று நீரால் ஏற்படும் வெள்ளப் பெருக்கை கட்டுப் படுத்த ஆற்றின் இரு பகுதிகளிலும் சுவர் எழுப்ப அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆம். ஜாபர்கான்பேட்டை தாழ்பாலம் முதல் மறைமலை அடிகள் பாலம் வரை அடையாறு ஆற்றின் இடது கரையில் சுமார் 800 மீட்டர் நீளத்திற்கு மட்டும் சுவர் எழுப்பதிட்டமுள்ளது.

திரு. ம. ஆபிரகாம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியது உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்கிறது. அதற்கு நன்றி கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கடந்த ஆண்டு இதுபோன்ற தடுப்புச் சுவர் இல்லாத காரணத்தால் மாடி வீடுகள் எல்லாம் மூழ்கடிக்கப்பட்டு ஒவ்வொருவரையும் படகிலே வீடுகளுக்கு அழைத்துச் சென்று, அப்புறப்படுத்துகின்ற சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே, இந்த ஆண்டாவது, மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்ற அந்த மக்களுக்கு உடனடியாக பாதுகாப்பு ஏற்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதை வரவேற்கிறேன். அது உடனடியாக செயல்படுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. என். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்திற்கு தற்போது தமிழக முதல்வர் அவர்கள் ரூ. 85 இலட்சம் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அந்தப் பணி உடனடியாகத் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டப் பணியானது முழுக்க, முழுக்க எனது தொகுதி மக்களுக்கு பயன்படுகின்ற ஒன்றாகும். இந்தத் திட்டம் சைதை மறைமலை அடிகள் பாலம் வரை நிறைவேற்றப்பட இருப்பதாக சொன்னார்கள். இந்த மன்றத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கோட்டூர்புரம் வரையில் அந்தத் தடுப்புச் சுவர் நீட்டிக்கப்படும் என்று சொன்னார்கள். அந்தத் திட்டம் என்ன ஆனது ? இப்போது எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்ற திட்டத்தின் மொத்த தொகை எவ்வளவு ? ரூ. 85 இலட்சம் ஒதுக்கியிருப்பதாகச் சொன்னார்கள். அது ஜாபர்கான்பேட்டை தாழ்பாலம் முதல் சைதை மறைமலை அடிகள் பாலம் வரையா ? அல்லது ஜாபர்கான்பேட்டையிலிருந்து ஒரு ரீச்சிற்கு உண்டான தொகையா என்ற விபரத்தையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தடுப்புச் சுவர் கட்டும் பணிக்காக மொத்தம் ரூ. 275 இலட்சங்களைக் கேட்டிருக்கிறார்கள். முதல் ஒரு ரீச்சுக்காக ரூ. 85 இலட்சம் இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். வெள்ளத் தடுப்பு அல்லது அதை நிவர்த்தி செய்வதற்காக இப்பொழுதுஅந்த வல்லுநர் குழுவினர் ஏறத்தாழ ரூ. 12 கோடி வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதிலே இப்பொழுது ரூ. 2 கோடி தமிழக அரசு ஒதுக்கியிருக்கிறது. அதிலேதான் ஒரு பகுதியாக ரூ. 85 இலட்சம் ஒதுக்கி ஒரு ரீச்சிற்குத் தடுப்புச் சுவர் கட்டும் பணியை ஏற்படுத்தியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை துரிதமாக எடுத்துக் கொள்ளாவிட்டால் அடுத்து வருகின்ற வெள்ளக்காலங்களில் பாதிப்பு ஏற்படும். கட்டியிருக்கின்ற அந்தப்பகுதியும் பாதிக்கப்படும். எனவே, இதைக் கருத்தில் கொண்டு கேட்கப்பட்டிருக்கின்ற தொகையான ரூ. 275 இலட்சங்களையும் விரைவில் ஒதுக்கி 3 மாத காலத்தில் இந்தப் பணிகள் முடிவடைய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடிந்த அளவிற்கு நிதி ஆதாரங்களை ஒதுக்கியிருக்கிறார்கள். வேலைகளை துரிதப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. ஆகவே தகுந்த நேரத்தில் வெகுவேகமாக பணிகள் முடுக்கிவிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1986 நவம்பர் 18]

திரு. ம. ஆபிரகாம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஜாபர்கான்பேட்டை என்னுடைய தொகுதியின் எதிர்ப்புறத்தில், அதே நேரத்தில் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர் கள் வாழ்கின்ற ராமாவரம் தோட்டத்திற்கு எதிரில் நந்தம் பாக்கம் பேரூராட்சியைச் சேர்ந்த பகுதி. அங்கு பர்மா தமிழர் கள் நீண்ட காலமாக வாழ்கிறார்கள். அங்கேயும், அதே போல் தான் மழைக் காலங்களில் ஆற்று நீர் வெள்ளப் பெருக்கெடுத்து குடிசைகள் எல்லாம் அடித்துச் செல்லப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் அந்த மக்கள் கரைஏறி, டிஃபன்ஸ் காலனியிலேயும், சர்ஜிக்கல் குவார்ட்டர்ஸிலேயும் தங்குகிறார்கள் அதையும்மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் கருத்தில் கொள்ளவேண்டும்ஏற்கனவே அந்தத் தொகுதி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய தொகுதி. அவருக்கு ஓட்டுக் கேட்கின்ற நேரத்தில் அந்த மக்களுக்கு, வாக்குறுதியைக் கொடுத்த தொண்டர் களில் நானும் ஒருவன். இப்போது அவர் முதல்வராக இருக் கிறார். அந்த ஏழை எளிய பாமர, பர்மாத் தமிழர்களுக்கு அந்தக் கரையில் தடுப்புச் சுவர் கட்டி, மழைக் காலங்களில் வீடுகள் எல்லாம் வெள்ளத்தில் அடித்துச் செல்லாத படி தடுத்து நிறுத்த, அரசு இந்த ஆண்டிலேயே , இதே திட்டத் திலே அதையும் இணைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வெள்ளத் தடுப்பிற்காக தனியாக ஒரு குழு அமைத்து, அந்தக் குழு பல்வேறு வகைகளிலே ஆராய்ந்து, எந்த, எந்தக் காரணங்களினாலே வெள்ளம் வருகிறது என்பதைச் சரிபார்த்து, அதற்காக ஏறத்தாழ 12 கோடி ரூபாய் வேண்டும் என்று சொல்லியிருக் கிறது. பல பிரிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே நந்தம்பாக்கம் பாலத்திற்குக் கீழே இருக்கிற ஆற்றை அகலப்படுத்துகிற பணியும் இருக்கிறது. ஆகவே, அப் படிப்பட்ட பணிகள் மூலமாக வெள்ளம் வருகிற நேரங்களில். அதற்கு தடுப்பு நடவடிக்கைகள் எடுத்து இருக்கிறோம். அதிலே ஆக்கிரமிப்புக்கள் மூலமாக வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அதை நாம் ஒன்றும் செய்ய முடியாது என்பதையும் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]